# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்.

## தரம் - 11

## நாடகமும் அரங்கியலும்
## செய்முறைப் பயிற்சிப் பரீட்சை – 2017

### வினாத்தாள் - 3

**1. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் செய்முறை 1**

*கருத்தூன்றலுடன் தொடர்புடைய அரங்க விளையாட்டு ஒன்றைக் கூறி, அதனை ஏனைய மாணவர்களின் உதவியுடன் அந்த விளையாட்டைச் சித்திரிக்குக.*

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| * | அரங்க விளையாட்டை தெரிவு செய்தல். | - 4 புள்ளிகள் |
| * | அரங்க விளையாட்டைக் கூறுதல். | - 4 புள்ளிகள் |
| * | அரங்க விளையாட்டை விதிமுறைப்படி ஆடுதல். | - 4 புள்ளிகள் |
| * | உடல் உளத் தளர் நிலை | - 4 புள்ளிகள் |
| * | முழுமை | - 4 புள்ளிகள் |

**2. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் 2**

ஆசிரியரால் வழங்கப்பெற்ற நாடகப் பிரதிகளின் பகுதியை வாசிப்பு நுட்பங்களைப் பயன்படுத்தி வாசித்துக் காட்டுக.
(ஆரொடு நோகேன், பிள்ளை அழுத கண்ணீர், கண்டறியாத கதை)

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| * | உச்சரிப்பு | - 4 புள்ளிகள் |
| * | குரல் ஏற்ற இறக்கம் | - 4 புள்ளிகள் |
| * | தொனி | - 4 புள்ளிகள் |
| * | உணர்ச்சி வெளிப்பாடு | - 4 புள்ளிகள் |
| * | பொருத்தப்பாடு | - 4 புள்ளிகள் |

**3. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் 3**

பின்வரும் புத்தாக்கத்தைத் தனியாகச் செய்து காட்டுக.

தொலைக்காட்சியில் சித்திரிக்கப்படும் விளம்பரம் ஒன்று.

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| * | கற்பனை | - 4 புள்ளிகள் |
| * | தொடர்பாடல் | - 4 புள்ளிகள் |
| * | படைப்பாக்கம் | - 4 புள்ளிகள் |
| * | மேடைப் பயன்பாடு | - 4 புள்ளிகள் |
| * | முழுமை | - 4 புள்ளிகள் |

## 4. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் 4

*உமக்கு விருப்பமான கிராமியப் பாடல் / சிறுவர் பாடல் /மரபுவழிப் பாடல் /நவீன நாடகப் பாடல் இவற்றில் ஒன்றைப் பாடி ஆடிக் காட்டுக.*

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| * | *உணர்வு வெளிப்பாடு* | *- 4 புள்ளிகள்* |
| * | *தாளம்* | *- 4 புள்ளிகள்* |
| * | *குரல் தொனி* | *- 4 புள்ளிகள்* |
| * | *பாத்திர வெளிப்பாடு* | *- 4 புள்ளிகள்* |
| * | *படைப்பாக்கம்* | *- 4 புள்ளிகள்* |

## 5. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் 5

*நீர் பார்த்த ஒரு நாடகத்தின் பாத்திரமொன்றைச் சித்திரித்துக் காட்டுக.*

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| * | *உடல் உளத்தளர் நிலை* | *- 4 புள்ளிகள்* |
| * | *பாத்திரச் சித்திரிப்பு* | *- 4 புள்ளிகள்* |
| * | *குரலும் பேச்சும்* | *- 4 புள்ளிகள்* |
| * | *வெளிப்பயன்பாடு* | *- 4 புள்ளிகள்* |
| * | *படைப்பாக்கத் திறனும் முழுமையும்* | *- 4 புள்ளிகள்* |

The National e-learning Portal for The General Education

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்.

**தரம் - 11**

## நாடகமும் அரங்கியலும்
## செய்முறைப் பயிற்சிப் பரீட்சை – 2017

**வினாத்தாள் - 4**

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – I: செய்முறை**

**கணிப்பீட்டு நேரம் – 50 நிமிடங்கள்**

*01. அ) நீர் அறிந்து வைத்துள்ள யாதாயினுமொரு தாளக்கட்டினைக் கூறுக.*

*அன்றேல்*

*ஒலிக்க விடப்படும் இசையைச் செவிமடுக்குக.*

*ஆ) தாளக்கட்டு அன்றேல் இசையினூடாக உமது நினைவிற்கு வரும் பாத்திரத்தைச் சிந்தியுங்கள். அப்பாத்திரத்திற்கேயுரிய உணர்வு வெளிப்பாட்டுடன் அதனை உறை நிலைப்படிமமாக படைப்பாக்கம் செய்க.*

*இ) அவ் உறைநிலைப் படிமத்தை அசைவதாகக் கற்பனை செய்து சித்தரிப்பில் ஈடுபடுக.*

*ஈ) "மிக ஆர்வமாக தொலைக்காட்சி பார்க்கும் ஒருவராக" நிகழ்த்திக் காட்டுக.*

*உ) மேற்கொள்ளப் பெற்ற மேற்குறித்த சித்தரிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களிற்கு வாய்வழிப் பதிலை வழங்குக.*

*1) தாளக்கட்டு அன்றேல் இசையினூடாக மேற்கிளம்பும் உணர்ச்சி யாது?*

*2) உறைநிலைப் படிமம் குறித்த உணர்ச்சி நிலையில் பேசக்கூடிய பேச்சை பேசிக் காட்டுக.*

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | கற்பனையும் படைப்பாக்கமும் | - | 4 புள்ளிகள் |
| 2. | வெளிப்படும் செய்தி அல்லது உணர்ச்சி | - | 4 புள்ளிகள் |
| 3. | உணர்ச்சி வேகமும் லயமும் | - | 4 புள்ளிகள் |
| 4. | நுட்ப வெளிப்பாடு | - | 4 புள்ளிகள் |
| 5. | வாய்வழிப் பதில்கள் | - | 4 புள்ளிகள் |
| | **மொத்தம்** | | 20 புள்ளிகள் |

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 2 : செய்முறை**

**கணிப்பீட்டு நேரம் – 30 நிமிடங்கள்**

*02. அ)* **பின்வரும் பாடலை வாசியுங்கள்.**

**வெயில் படாமலே வெள்ளைத் தொப்பி**
**வேறு வேறு நிறமான தொப்பி**
**நல்ல நல்ல வடிவான தொப்பி**
**நானும் மலிவாகத் தாறேன் தொப்பி.**

**தம்பி தங்கச்சி வாருங்கோ**
**தலையைக் கொஞ்சம் காட்டுங்கோ**
**எங்கை எங்கை அட பார்ப்பமே**
**அடடா சொக்கிப் போச்சுதே.**

*ஆ) இப்பாடலில் இடம்பெறும் நாடகச் சூழமைவுகளை பட்டியற்படுத்துக.*

*இ) அவற்றில் யாதாயினும் ஓர் சூழமைவைத் தெரிவு செய்து தனியாகச் சித்தரித்துக் காட்டுக.*

*ஈ) பரீட்சகரால் வினவப்படும் பின்வரும் வினாக்களுக்கு பதிலளிக்குக.*

*1) இப் பாடலை வெறுமனே வாசிப்பதற்கும், அபிநயித்துப் பாடுவதற்குமான வேறுபாடு யாது?*

*2) நாடகமாக்குவதற்காக குறித்த சூழமைவை தேர்ந்தெடுத்தற்கான காரணம் யாது?*

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | | |
|---|---|---|---|
| *1.* | *கதையையும் கருவையும் கண்டறிதல்.* | - | *4 புள்ளிகள்* |
| *2.* | *சூழமைவுகளை நாடகமாக்குதல்.* | - | *4 புள்ளிகள்* |
| *3.* | *கற்பனையும் படைப்பாக்கமும்* | - | *4 புள்ளிகள்* |
| *4.* | *வெளிப்பாட்டு நுட்பங்கள்* | - | *4 புள்ளிகள்* |
| *5.* | *வாய்வழிப் பதில்கள்* | - | *4 புள்ளிகள்* |
| | **மொத்தம்** | | *20 புள்ளிகள்* |

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 3 : கேட்டல்**

**கணிப்பீட்டு நேரம் – 30 நிமிடங்கள்**

*03. அ) பரீட்சகரால் வழங்கப்படும் பின்வரும் பாடல்களில் யாதாயினுமொன்றைப் பாத்திர உணர்வு வெளிப்பாட்டுடன் பாடிக் காட்டுங்கள்.*

**பாடல் 1**

**ஆதிசிவன் மைந்தனல்லோ – நானும்**
**ஆதிகாத்தான் ஓடி வாறேன் சபையோரே**
**ஐயா பெரியோரே**
**சோதி நிலை நின்றெரிக்க – இங்கே**
**துணை செய்வார் ஆதி சிவன் மைந்தனெனக்கு**
**– இப்போ மைந்தனெனக்கு**
**பாலன் வந்தேன் சபைதனிலே**
**வந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம் சொன்னேன்.**
**– பாலன் வணக்கம் சொன்னேன்.**
**கும்பிட்டு தெண்டனிட்டு – நானும்**
**கோடி நமஸ்காரம் செய்தேன் சபையோரே**
**ஐயா பெரியோரே.**

**பாடல் 2**

பொல்லா ரல்லோர் கனவு கண்டேன்
　　மன்னா மன்னவனே – நீங்க
போர் புரிந்து மடியக் கண்டேன்
　　மன்னா மன்னவனே

பாம்பணிந்த சிவன் மகளே
　　பத்தினிப் பெண்ரதியே –நானும்
இக்கணமே சென்று வாறேன்
　　அன்னரதி மயிலே

ஆந்தை அலறக் கண்டேன்
　　மன்னா மன்னவனே – நீங்க
அனலாய் எரியக் கண்டேன்
　　மன்னா மன்னவனே

பாம்பணிந்த சிவன் மகளே
　　பத்தினிப் பெண்ரதியே – நானும்
இக்கணமே சென்று வாறேன்
　　அன்னரதி மயிலே

*அன்றேல்*

*உமக்குத் தெரிந்த கூத்துப்பாடல் ஒன்றை பாடிக் காட்டுங்கள்.*

*ஆ) பரீட்சகரால் காண்பிக்கப் பெறும் ஒளிப்படங்களைத் துணையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.*

*1) ஒளிப்படத்தில் காண்கின்ற பாத்திரத்தின் பெயர் யாது?*

*2) இப்பாத்திரம் இடம்பெறும் குறித்த களம் யாது?*

*இ) கணனித் திரையில் / திரையில் (Multimedia / Video) காண்பிக்கப் பெறும் கூத்து / இசைநாடக / நவீன நாடகங்களின் காட்சித் துண்டத்தை அவதானித்து அது குறித்த பின்வரும் வினாக்களுக்கு பதிலளிக்குக.*

*1) இக் காட்சி இடம்பெறும் குறித்த ஆற்றுகையின் பெயர் யாது?*

*2) இக் காட்சி விபரிக்கும் மோடி யாது?*

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | வாய்வழிப் பதில்கள் (ஆ) | - | 4 புள்ளிகள் |
| 2. | வாய்வழிப் பதில்கள் (இ) | - | 4 புள்ளிகள் |
| 3. | பாடும் திறன் / ஆடும் திறன் | - | 4 புள்ளிகள் |
| 4. | பாத்திர உணர்வு வெளிப்பாடு | - | 4 புள்ளிகள் |
| 5. | வெளிப்பாடு | - | 4 புள்ளிகள் |
| | | மொத்தம் | 20 புள்ளிகள் |

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 4: ஆக்கச் செயற்பாடு**

**கணிப்பீட்டு நேரம் – 40 நிமிடங்கள்**

*04. அ) பரீட்சகரால் வழங்கப் பெறும் சிறுவர் கதையினை வாசித்து அதில் இனம் காணும் பாத்திரங்களில் யாதாயினும் ஒன்றைத் தெரிவு செய்க. அப்பாத்திரத்தினது குணாதிசயங் களுக்கேற்ப வேட உடை மாதிரியைத் (sample) தயாரிக்குக.*
*(இயற்கைப் பொருட்கள், கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி)*

ஆ) "களம்" ஒன்றினை வெளிப்படுத்தத்தக்கதாக வழங்கப்படும் ஒளிப்படத்தை பார்த்து, அது மனதில் தோற்றுவிக்கும் படிமத்தை கற்பனை செய்க. சூழலில் உள்ள பொருட்களைப் பயன்படுத்தி அக்காட்சியினை உருவாக்குக. இதற்குத் துணையாக சக பரீட்சாத்திகளை இணைத்துக் கொள்ளலாம்.

இ) பரீட்சகரின் அறிவுறுத்தலுக்கமைய யாதாயினும் "இயற்கைத் தோற்றப்பாடு" ஒன்றினைக் கற்பனை செய்க. அக் கற்பனை படிமத்துக்கு அமைவாக அத்தோற்றப்பாட்டினை அசைவியக்க வடிவாக்கம் (choreography) செய்க. துணையாக சக பரீட்சாத்திகளை இணைத்துக் கொள்க.

ஈ) "திருமண வைபவம்" ஒன்றைக் கற்பனை செய்க. அங்கு எழக் கூடிய ஒலிகளை மனதிற் கொள்க. சூழலில் இருந்து கிடைக்கக் கூடிய ஒலிகளைப் பயன்படுத்தி ஒலிகளின் வழியாக இந்நிகழ்வினைச் சித்தரித்துக் காட்டுக.

உ) "ஆரொடு நோகேன்" நாடக எழுத்துருவில் இடம்பெறும் யாதாயினும் ஒரு பாத்திர ஆள்மேற்கொள்ளலை வேட உடை, ஒப்பனை மூலம் மேற்கொள்க.

மேற்குறித்த ஆக்கச் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

1) வழங்கப் பெற்ற இயற்கைத் தோற்றப்பாட்டினூடாக மேற்கிளம்பும் உணர்வு யாது?
2) வேட உடை, ஒப்பனை மூலம் நீர் ஆள்மேற்கொண்ட பாத்திரம் பயன்படுத்தும் கைப்பொருள்கள் இரண்டினைக் கூறுக.

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | கற்பனையும் படைப்பாக்கமும் | - 4 புள்ளிகள் |
| 2. | வெளிப்படும் செய்தி / உணர்ச்சி | - 4 புள்ளிகள் |
| 3. | உணர்ச்சி வேகமும் லயமும் | - 4 புள்ளிகள் |
| 4. | நுட்ப வெளிப்பாடு | - 4 புள்ளிகள் |
| 5. | வாய்வழிப் பதில்கள் | - 4 புள்ளிகள் |
| | மொத்தம் | 20 புள்ளிகள் |

The National e-learning Portal for The General Education

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 5 : ஆக்கம்**

**கணிப்பீட்டு நேரம் – 40 நிமிடங்கள்**

05. அ) புதியதொரு வீடு நாடகத்தில் இடம்பெறும் யாதாயினுமொரு பாடலைப் பாடுக.

ஆ) "ஆரொடு நோகேன்" நாடகத்தில் "புது யூனிபோம்! இண்டைக்கு அதைப் போடுவம் என்பது தொடக்கம் "ஷங்கரி! நீங்கள் இப்ப முந்தியைப் போல இல்லை!" என்பது வரையான சுபத்திரா, ஷங்கரி, றஞ்சித் ஆகியோர் உரையாடும் பகுதியை வாசிப்பு அரங்கு (Reading Theater) நிலையில் வாசிக்குக.

இ) மேற்குறித்த உரையாடல் இடம்பெறும் காட்சியை நிகழ்த்திக் காட்டுக.

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | பாடல்களைப் பாடுதல் | - 4 புள்ளிகள் |
| 2. | வாசிப்பு நுட்பங்களைப் பயன்படுத்தல் | - 4 புள்ளிகள் |
| 3. | உடல், குரல் அசைவு வெளிப்பாடு | - 4 புள்ளிகள் |
| 4. | பாத்திர வெளிப்பாடு | - 4 புள்ளிகள் |
| 5. | மோடிக்கேற்ற ஆற்றுகைத்திறன் | - 4 புள்ளிகள் |
| | **மொத்தம்** | 20 புள்ளிகள் |

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்.

தரம் - 11

# நாடகமும் அரங்கியலும்
# செய்முறைப் பயிற்சிப் பரீட்சை - 2017

## வினாத்தாள் - 1

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் - 1: செய்முறை**

01. அ) உமக்குத் தெரிந்த யாதாயினுமொரு தாளக்கட்டினைக் கூறுக.

ஆ) அத் தாளக்கட்டினை யாதாயினும் ஓர் உணர்ச்சி வெளிப்பாட்டுடன் கூறுக.

இ) அவ்வுணர்ச்சி வெளிப்பாட்டுக்குப் பொருத்தமாக வெளியில் அசைக.

ஈ) மேற்படி உணர்ச்சி வெளிப்பாட்டுடனான தாளக்கட்டிற்கேற்ப யாதாயினும் ஓர் பாத்திரம் / சம்பவம் ஒன்றினைச் சித்திரிக்குக.

உ) பின்வரும் வாய்மொழி வினாக்களுக்குப் பதிலளிக்குக.
1) மேற்படி சித்திரிப்பில் மேலோங்கி நிற்கும் உணர்வு யாது?
2) மேற்படி சித்திரிப்புடன் தொடர்படக் கூடிய ஏனைய பாத்திரங்கள் எவை?

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | கற்பனையும் படைப்பாக்கமும் | - 4 புள்ளிகள் |
| 2. | வெளிப்படும் உணர்ச்சி / செய்தி | - 4 புள்ளிகள் |
| 3. | உணர்ச்சி வேகமும் லயமும் | - 4 புள்ளிகள் |
| 4. | நுட்ப வெளிப்பாடு | - 4 புள்ளிகள் |
| 5. | வாய்வழிப் பதில்கள் | - 4 புள்ளிகள் |
| | **மொத்தம்** | 20 புள்ளிகள் |

The National e-learning Portal for The General Education

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் - 2 : செய்முறை**

02. அ) பின்வரும் சிறுகதைப் பகுதிகளுள் யாதேனும் ஒன்றை வாசியுங்கள்.
மனித மாடு / தோணி / நாட்டியப் பெண்

ஆ) நீர் தெரிவு செய்த சிறுகதைப் பகுதிக்குள் காணப்பெறும் நாடகச் சூழமைவுகளைப் பட்டியற்படுத்துக.

இ) அப்பகுதியைத் தனியாகச் சித்திரித்துக் காட்டுக.

ஈ) பின்வரும் வாய்வழி வினாக்களுக்குப் பதிலளிக்குக.
1) நீர் சித்திரித்த சூழமைவை கதையாக வாசிப்பதற்கும் நாடகமாக வாசிப்பதற்கும் இடையிலான வேறுபாடு யாது?
2) நாடகமாக்கலுக்காக மேற்படி சூழமைவைத் தெரிவு செய்தமைக்கான காரணம் யாது?

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | கதை மற்றும் கருவைக் கண்டறிதல் | - 4 புள்ளிகள் |
| 2. | சூழமைவுகளை நாடகமாக்குதல் | - 4 புள்ளிகள் |
| 3. | கற்பனையும் படைப்பாக்கமும் | - 4 புள்ளிகள் |
| 4. | வெளிப்பாட்டு நுட்பங்கள் | - 4 புள்ளிகள் |
| 5. | வாய்வழிப் பதில்கள் | - 4 புள்ளிகள் |
| | மொத்தம் | 20 புள்ளிகள் |

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 3: கேட்டல்**

*03. அ)* ''என்னடி உந்தன் கோப்பியில் ஒரு சிறு...'' எனும் நவீன நாடகப் பாடலைப் பாத்திர உணர்வு வெளிப்பாட்டுடன் பாடுக.

அல்லது

நீர் விரும்பிய கூத்தாற்றுகை ஒன்றின் சிறிய பகுதியை நிகழ்த்திக் காட்டுக.

*ஆ)* (இசைநாடகக் காட்சி ஒன்றின் ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்திப் பின்வரும் வினாக்களை வினவலாம்.)

1) படத்திலுள்ள காட்சியில் மேலோங்கி நிற்கும் உணர்வு யாது?

2) மேற்படி காட்சியிலுள்ள பாத்திரங்கள் / காட்சித்திரைகள் வெளிப்படுத்தும் செய்தி யாது?

*இ)* ஆசிரியரால் பாடிக் காட்டப்பெறும் / இறுவட்டில் ஒலிக்க விடப்படும் பின்வரும் பாடலை செவிமடுத்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை கூறுக.

**"வீரம் வீரமென்று விரும்பியுரைத்தீரென் ஐயா..."**

1) மேற்படி பாடல் இடம் பெற்ற கூத்து வகை என்ன?
2) இப்பாடல் பாடப் பெற்ற சந்தர்ப்பம் யாதாக இருக்கலாம்?

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | பாடும் திறன் / ஆடும் திறன் | - 4 புள்ளிகள் |
| 2. | பாத்திர உணர்வு வெளிப்பாடு | - 4 புள்ளிகள் |
| 3. | வெளிப் பயன்பாடு | - 4 புள்ளிகள் |
| 4. | வாய்வழிப் பதில்கள் (ஆ) | - 4 புள்ளிகள் |
| 5. | வாய்வழிப் பதில்கள் (இ) | - 4 புள்ளிகள் |
| | மொத்தம் | 20 புள்ளிகள் |

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 4 : ஆக்கச் செயற்பாடு**

*04. அ)* ஆரொடு நோகேன் நாடகக் காட்சிகளுள் நீர் விரும்பிய ஓர் காட்சியை விதானிப்புச் செய்க.

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | கற்பனையும் படைப்பாக்கமும் | - 4 புள்ளிகள் |
| 2. | ஊடகப் பயன்பாடும் வளமுகாமையும் | - 4 புள்ளிகள் |
| 3. | ஒத்திசைவும் பொருத்தப்பாடும் | - 4 புள்ளிகள் |
| 4. | நுட்ப வெளிப்பாடு | - 4 புள்ளிகள் |
| 5. | நேர்த்தி | - 4 புள்ளிகள் |
| | மொத்தம் | 20 புள்ளிகள் |

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 5: ஆக்கம்**

*05. அ)* மகாகவியின் 'புதியதொரு வீடு' நாடக எழுத்துருவிலிருந்து யாதாயினுமொரு பாடலைப் பாடுக.

*ஆ)* மேற்படி எழுத்துருவின் பகுதி ஒன்றினை வாசிப்பு அரங்கு நிலையில் வாசியுங்கள் (தனி)

*இ)* அப் பகுதியைக் குழுவாக ஆற்றுகை செய்யுங்கள்.

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | பாடல்களைப் பாடுதல் | - 4 புள்ளிகள் |
| 2. | வாசிப்பு நுட்பங்கள் | - 4 புள்ளிகள் |
| 3. | உடல், குரல், அசைவு வெளிப்பாடு | - 4 புள்ளிகள் |
| 4. | பாத்திரப் பொருத்தம் | - 4 புள்ளிகள் |
| 5. | மோடிக்கேற்ற ஆற்றுகைத் திறன் | - 4 புள்ளிகள் |
| | மொத்தம் | 20 புள்ளிகள் |

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்.

**தரம் - 11**

## (51) நாடகமும் அரங்கியலும்
## செய்முறைப் பயிற்சிப் பரீட்சை – 2017

**வினாத்தாள் - 2**

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 1: செய்முறை**

**கணிப்பீட்டு நேரம் – 50 நிமிடங்கள்**

*01. அ) கீழே தரப்பட்டுள்ள சூழமைவுகளில் ஒன்றினைத் தெரிந்தெடுத்து சகபரீட்சார்த்திகளைப் பயன்படுத்தி உறைநிலைக் காட்சியொன்றினை அமைக்குக.*

*1) வரட்சி காரணமாகப் பயிர்கள் அழிந்து போதல்.*

*2) வசிப்பிடத்திற்கு அருகில் பொதுக் கழிவுகள் கொட்டப் பெறுதல்.*

*3) கூடா நட்பு ஆபத்தைக் கொண்டு வருதல்.*

*ஆ) நீர் தெரிந்தெடுத்த சூழமைவிற்குப் பொருத்தமான கைப்பொருள்களைப் பயன்படுத்து வதற்குச் சூழலில் உள்ள பொருள்களைக் கையாண்டு பதிலளிக்குக.*

*இ) மேற்படி சித்திரிப்புகள் தொடர்பில் கீழ்வரும் வினாக்களுக்கு வாய்வழிப் பதில்களை வழங்குக.*

*1) நீர் சித்திரித்த உறைநிலைக் காட்சியை அடிப்படையாகக் கொண்டு கதையொன்று கூறுக.*

*2) நீர் சித்திரித்த காட்சியில் இருந்து பரீட்சகரால் வினவப்பெறும் பாத்திரமொன்றிற்கு இருக்கக் கூடிய பாத்திரப் பண்புகள் 2 தருக.*

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | | |
|---|---|---|---|
| *1.* | *கற்பனையும் படைப்பாக்கமும்* | - | *4 புள்ளிகள்* |
| *2.* | *வெளிப்படும் செய்தியும் தாக்கவன்மையும்* | - | *4 புள்ளிகள்* |
| *3.* | *நடிப்பு நுட்ப வெளிப்பாடு* | - | *4 புள்ளிகள்* |
| *4.* | *காட்சிக்குரிய உணர்ச்சியும் தொனியும்* | - | *4 புள்ளிகள்* |
| *5.* | *வாய்வழிப் பதில்கள் (2 x 2)* | - | *4 புள்ளிகள்* |
| | **மொத்தம்** | | *20 புள்ளிகள்* |

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 2: செய்முறை**

**கணிப்பீட்டு நேரம் – 30 நிமிடங்கள்**

*02. அ) விதந்துரைக்கப் பெற்ற சிறுகதைகளான தோணி / நாட்டியப் பெண் / மனித மாடு என்பவற்றில் இருந்து ஒன்றைத் தெரிந்தெடுத்து அதிலுள்ள நாடகமாக்கத்தக்க சம்பவங் களைப் பட்டியற்படுத்துக.*

*ஆ) அச் சம்பவங்களில் இருந்து ஒரு சம்பவத்தைத் தெரிந்தெடுத்து, அதனைத் தனியாளாகச் சித்திரித்துக் காட்டுங்கள்.*

*இ) சித்திரிப்புத் தொடர்பில் வினவப் பெறும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.*

*1) குறித்த சிறுகதையில் இருந்து பரீட்சார்த்தி குறித்த சம்பவத்தை மாத்திரம் தெரிந்தெடுத்தமைக்கான காரணங்கள் யாவை?*

2) குறித்த சம்பவத்தைத் தனியாளாகச் சித்திரிப்பதற்குப் பதில் பல்வேறு நடிகர்களையும் பயன்படுத்தியிருந்தால் குறித்த சித்திரிப்பில் எத்தகைய மாற்றங்களைச் செய்திருப்பீர்?

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | கதையின் தொனி வெளிப்படுதல் | - | 4 புள்ளிகள் |
| 2. | நாடகச் சம்பவங்களின் பொருத்தப்பாடு | - | 4 புள்ளிகள் |
| 3. | கற்பனையும் படைப்பாக்கமும் | - | 4 புள்ளிகள் |
| 4. | சித்திரிப்புத் திறன்கள் | - | 4 புள்ளிகள் |
| 5. | வாய்வழிப் பதில்கள் | - | 4 புள்ளிகள் |
| | **மொத்தம்** | | 20 புள்ளிகள் |

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 3: கேட்டல்**

**கணிப்பீட்டு நேரம் – 30 நிமிடங்கள்**

03. அ) நீர் முன்னாயத்தம் செய்து வந்த கூத்தாற்றுகை ஒன்றினை நிகழ்த்திக் காட்டுக. அன்றேல் இசைநாடகப் பாடல் ஒன்றைப் பாடி நடிக்குக.

ஆ) குறித்த கூத்து அன்றேல் இசைநாடகப் பாடற் சித்திரிப்பிற்கு பதிலாகச் சொல்லாடல் மூலம் மேற்படி விடயத்தைச் சித்திரிப்பதாயின் நீர் பேசக் கூடிய சொல்லாடல்களைப் பேசி நடிக்குக.

இ) பாடி / ஆடி நடிப்பதற்கும் சொல்லாடல் வழியாக நடிப்பதற்கும் இடையிலான வேறுபாடு யாது?

ஈ) சித்திரிப்பில் மேலோங்கி நிற்கும் உணர்ச்சி யாது? பாத்திரம் யாது?

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சித்திரிப்புத் திறன்கள் | | - | 4 புள்ளிகள் |
| 2. | பாத்திரப் பண்பு வெளிப்படுதல் | | - | 4 புள்ளிகள் |
| 3. | அரங்க வெளிப் பயன்பாடு | | - | 4 புள்ளிகள் |
| 4. | வாய்வழிப் பதில் | (இ) | - | 4 புள்ளிகள் |
| 5. | வாய்வழிப் பதில் | (ஈ) | - | 4 புள்ளிகள் |
| | | **மொத்தம்** | | 20 புள்ளிகள் |

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 4: ஆக்கச் செயற்பாடு**

**கணிப்பீட்டு நேரம் – 40 நிமிடங்கள்**

04. அ) பின்வரும் 'களங்களில்' ஒன்றைத் தெரிந்தெடுத்து, சூழலில் கிடைக்கத்தக்க பொருள் களைப் பயன்படுத்தி, குறித்த களம் வெளிப்படும் வகையில் விதானிப்புச் செய்க.

ஆ) குறித்த களத்திற்குப் பொருத்தமான பாத்திரமொன்றைத் தெரிவு செய்து, களத்தில் சித்திரிக்குக.

இ) மேற்படி களத்தில் தொழிற்படும் பாத்திரத்தைக் குறித்துக்காட்ட எத்தகைய ஒளிவிதானிப்புக் கருவியைப் பயன்படுத்துவீர்?

ஈ) நீர் ஏற்கும் பாத்திரத்திற்கு எத்தகைய வேட உடையைப் பயன்படுத்துவீர்?

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | | |
|---|---|---|---|
| *1.* | *கற்பனையும் படைப்பாக்கமும்* | - | *4 புள்ளிகள்* |
| *2.* | *வெளிப்படும் செய்தி* | - | *4 புள்ளிகள்* |
| *3.* | *பாத்திரச் சித்திரிப்பு* | - | *4 புள்ளிகள்* |
| *4.* | *வாய்வழிப் பதில்கள்* | - | *4 புள்ளிகள்* |
| *5.* | *வாய்வழிப் பதில்கள்* | - | *4 புள்ளிகள்* |
| | **மொத்தம்** | | *20 புள்ளிகள்* |

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 5: ஆக்கச் செயற்பாடு**

**கணிப்பீட்டு நேரம் – 40 நிமிடங்கள்**

*05. அ) புதியதொரு வீடு நாடகத்தில் இடம்பெற்ற பின்வரும் பாடல்களில் ஒன்றை உரிய உணர்ச்சி வெளிப்பாட்டுடன் பாடுக.*

*1) சிறுநண்டு மணல் மீது*
*2) வெள்ளி சிணுங்கி அழ*
*3) தூரத்து ஏலே வெண்மணலில்*

*ஆ) பாடல் வெளிப்படுத்தும் காட்சியை அசைவியக்க வடிவாக்கம் செய்க.*

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | | |
|---|---|---|---|
| *1.* | *கற்பனையும் படைப்பாக்கமும்* | - | *4 புள்ளிகள்* |
| *2.* | *பாடும் திறன்* | - | *4 புள்ளிகள்* |
| *3.* | *உணர்ச்சி வெளிப்பாடு* | - | *4 புள்ளிகள்* |
| *4.* | *அசைவியக்க வடிவாக்கத்தின் அழகியல் நுட்பம்* | - | *4 புள்ளிகள்* |
| *5.* | *அரங்க வெளிப் பயன்பாடு* | - | *4 புள்ளிகள்* |
| | **மொத்தம்** | | *20 புள்ளிகள்* |

The National e-learning Portal for The General Education